# இலங்கையின் பாதை உலகத்திற்கு நம்பிக்கை ஏற்படுத்தியுள்ளது மீளக் கட்டியெழுப்புவதற்கு பெரும்பான்மையான மக்கள் ஆதரவு!

## சுதந்திரதினத்தையொட்டி ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



இலங்கையின் தற்போதைய பாதை உலகத்திற்கு நம்பிக்கை ஏற்படுத்தியிருப்பதால் இந்தப் பாதையில் தொடர்ந்து பயணிக்கவும், மீண்டும் சுபீட்சத்தைக் கொண்டுவரவும் இந்த சுதந்திர தினத்தில் உறுதி கொள்வோம், என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையின் 76 ஆவது சுதந்திரதினத்தை முன்னிட்டு ஜனாதிபதி ஊடகப்பிரிவு அனுப்பியுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கையின் 75ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடும் போது, வங்குரோத் தடைந்த நாடு என்று முத்திரை குத்தப்பட்டிருந் தோம். ஆனால், 76ஆவது சுதந்திர தினத்தில், பல இடர்பாடுகளுக்கு மத்தியிலும் அந்த நிலையிலிருந்து விடுபட்டு, பொருளாதாரத்தை நிலையான நிலைக்கு கொண்டு வர முடிந்துள்ளது

நாட்டின் பெரும்பான்மையான மக்கள், துன்பங்களைச் சகித்துக்கொண்டு நாட்டை மீளக் கட்டியெழுப்பும் நீண்ட கால வேலைத்திட்டத்திற்கு ஆதரவளித்ததால் எம்மால் மெதுவாக முன்னேற முடிந்தது. இந்தப் பாதையில் தொடர்ந்து செல்லும் போது, சிரமங்கள் யாவும் மறைந்துவிடும், வாழ்க்கைச் சுமை குறையும், பொருளாதாரம் வலுவடையும். இலங்கைத் தாய்க்கு மீண்டும் விடிவு கிட்டும்.

மேலும், நாட்டை மீளக் கட்டியெழுப்பும் பெருமைமிக்க பணிக்கு இலங்கையிலும் நாட்டுக்கு வெளியிலும் வாழும் அனைத்து இலங்கையர்களும் தங் களால் முடிந்தளவு பங்களிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன், என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (04)


# மாலைக்கதிர்
Maalaikkathir






சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 தை 19 வெள்ளிக்கிழமை 02.02.2024 கதிர் 171


## பெலியத்த படுகொலை 39 வயதுப் பெண் கைது!

### துப்பாக்கிச்சூடு நடத்திய இருவரும் வெளிநாட்டுக்குத் தப்பியோட்டம்

அபே ஜனபல வேகய கட்சியின் தலைவர் சமன் பெரேரா உட்பட ஐவர் சுட்டுக்கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் மேலும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

39 வயது பெண்ணொருவரும், அவரின் 72 வயது தந்தையுமே விசேட அதிரடிப் படையினரால் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஐவர் படுகொலையின் பிரதான சூத்திரதாரியாக செயற்பட்டுள்ளார் எனக் நபரின் மனைவியும், அவரின் தந்தையுமே கைது


2➤

## வடக்கு, கிழக்கில் இரண்டு ஈரநிலப் பகுதிகளை அழித்து விட முஸ்தீபு சிரேஷ்ட சுற்றுச்சூழல் ஆர்வலர் ஜகத் குணவர்தன குற்றச்சாட்டு!

உலக ஈரநிலத் தினத்தின்போது அவற்றை பாதுகாப்பதற்கு மாறாக அப்பொறுப்பினை உதறித்தள்ளிவிட்டு வடக்கு கிழக்கு பகுதிகளில் அமைந்துள்ள தேசிய அளவில் மிகவும் மதிப்புமிக்க இரண்டு ஈரநிலங்கள் பகுதிகளை அழித்து விடுவதற்கு அதிகாரிகள் தற்போது ஆவணங்களை தயாரித்து வருவதாக சிரேஷ்ட சுற்றுச்சூழல் ஆர்வலர் சட்டத்தரணி ஜகத் குணவர்தன தெரிவித்துள்ளார்.

இதன்படி, விடத்தல்தீவு மற்றும் ஆதாம் பாலம் கடல்சார் வனம் ஆகிய இடங்களை சார்ந்த ஈரநிலப் பகுதிகளை அழித்து விடுவதில் அரசாங்கத்தின் பொறுப்பு வாய்ந்த சில அதிகாரிகள் மும்முரமாக திட்டமிட்டு வருவதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார். வர்த்தக மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக இந்த

2➤



## சுதந்திர தின எதிர்ப்புப் போராட்டத்துக்கு வலுச்சேர்ப்போம்!

### அறிக்கை மூலம் அழைப்பு விடுத்தார் சிறீதரன் எம்.பி.



இலங்கையின் சுதந்திர தினமான பெப்ரவரி 4 ஆம் திகதியை கரிநாளாகப் பிரகடனப்படுத்தி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் கிளிநொச்சியில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள எதிர்ப்புப் போராட்டத்துக்கு வலுச்சேர்க்குமாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள

2➤

## வரும் திங்கட்கிழமை பொது விடுமுறையல்ல!

திங்கட்கிழமை பொது விடுமுறை தினமாக பிரகடனப்படுத்தப்படமாட்டாது என பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் பிரதீப் யசரத்ன இன்று தெரிவித்துள்ளார்.

76 ஆவது சுதந்திர தினம் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை கொண்டாடப்பட்டாலும் அதற்கு மறுநாள் பொது விடுமுறை அல்ல எனவும், திங்கட்கிழமை அனைத்து அரச நிறுவனங்களும் வழமை போன்று இயங்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (04)

## உயர்தர வினாத்தாள் முன்கூட்டியே வெளியானமை தொடர்பில் இன்னும் முறையான விசாரணையில்லை!

### ஜோசப் ஸ்டாலின் குற்றச்சாட்டு

உயர்தர விவசாய விஞ்ஞான வினாத்தாள் முன்கூட்டியே வெளியானமை தொடர்பில் பரீட்சை திணைக்களம் இன்னும் முழுமையான விசாரணையை ஆரம்பிக்கவில்லை எனவும் இது குறித்து பரீட்சை திணைக்களம் மௌனம் காத்து வருவதாகவும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் குற்றம் சாட்டியுள்ளார்.

இது போன்ற சம்பவம் எப்படி நடந்தது, மற்றும் வேறு இடங்களில் இது போன்ற வினாத்தாள்கள் கசிந்துள்ளனவா? என்பது குறித்து பரீட்சை திணைக்



களம் விளக்கமளிக்க வேண்டும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி விவசாய வினாத்தாள் முகநூல் உட்பட சமூக வலைத்தளங்களில் முன்கூட்டியே

2➤

## கருங்கற்களை ஏற்றுமதி செய்வதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராய்வு

ஒரு மில்லியன் மெட்றிக் தொன் வரையிலான கருங்கற்களை ஏற்றுமதி செய்வதற்கான சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்வதற்காக குழுவொன்றை நியமிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இந்த குழு கருங்கல் ஏற்றுமதிக்கான சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்து பரிந்துரைகளுடன் அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளது.

ஹம்பாந்தோட்டை, ருஹுணு மாகம்புர துறைமுக நிர்மாணத்தின் போது அகற்றப்பட்ட கருங்கற்கள் ஏற்கனவே துறைமுகப் பகுதியிலும் அம்பாந்தோட்டை புதிய வைத்தியசாலை கட்டிடம் ஒன்றிற்கு அருகாமையிலும் குவிக்கப்பட்டுள்ளதால், அக்கருங்கற்களை ஏற்றுமதி செய்வது தொடர்பில் ஆராய்ந்து அனுமதி வழங்குவதற்காகவே இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் கட்டுமானம் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தடைபட்டுள்ளதால் இப்போதைக்கு இந்த கருங்கற்களுக்கான தேவை குறைந்துள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக, கருங்கற் பாறை அகற்றல் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் வாழ்வாதாரம் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய பிற மக்களின் வாழ்வாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது என அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ரெப-06)

# உதிரம் கொடுத்து உயிர் காப்போம்! கோரளைப்பற்றில் இரத்ததானம்



வாழைச்சேனை லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் “உதிரம் கொடுத்து உயிர் காப்போம் “எனும் தொனிப் பொருளில் இரத்ததான முகாம் கோரளைப்பற்று பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக கோரளைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி ஜெயாந்தி திருச்செல்வமும், அதிதிகளாக முன்னாள் லயன்ஸ் கழக தலைவர்களான கே.இராஜகோபால், கே.கணபதிப்பிள்ளை, சமூக மேம்பாட்டாளர் ஜோசப் சிவில்ராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை வைத்தியர்கள்,தாதி உத்தியோஸ்தர்கள், லயன்ஸ் கழக உறுப்பினர்கள், பொலிஸ் உத்தியோஸ்தர்கள், குருதி கொடையாளிகள் என பலரும் நிகழ்வில் இணைந்து கொண்டனர்.

## புலமைப்பரிசில் பரீட்சை பாடசாலை வெட்டுப்புள்ளி

2023 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கமைய, பாடசாலை வெட்டுப்புள்ளிகள் கல்வி அமைச்சினால் இன்று வெளியிடப்பட்டுள்ளன.

அதன்படி வெட்டுப் புள்ளிகளுக்கு அமைய தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களை 6 ஆம் தரத்துக்கு பாடசாலைகளில் சேர்க்கும் செயன்முறை பின்பற்றப்படுகிறது.

வெட்டுப்புள்ளிகள் தொடர்பான தகவல்களை கல்வி அமைச்சின் இணையத்தளமான (www.moe.gov.lk) இல் பெற்றுக்கொள்ள முடியும் என கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

## 24 மணிநேரத்தில் 703 பேர் சிக்கினர்

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் விசேட சோதனை நடவடிக்கையின் கீழ், இன்று அதிகாலை 12.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணிநேரத்தில் 703 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் போதைப்பொருள் குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய 525 பேரும், குற்றப்பிரிவுக்கு அனுப்பப்பட்டுள்ள பட்டியலில் உள்ள 178 பேரும் அடங்குகின்றனர் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

கைதானவர்களில் ஒருவர் தடுத்து வைத்து விசாரணை செய்யப்படுவதுடன், 6 பேர் புனர்வாழ்வு மையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

அதேநேரம் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகம் மற்றும் பொலிஸ் விசேட பணியகத்தால் தேடப்படும் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள 9 சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.(அ)

## புளியங்குளத்தில் பொலிஸ் வாகனத்தின் மீது தாக்குதல்!

### ஒருவர் கைது செய்யப்பட்டார்

வவுனியா, புளியங்குளம் பொலிஸ் நிலைய வாகனத்தின் மீது தாக்குதல் மேற்கொண்ட ஒருவரைப் பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

சந்தேகநபர் ஒருவரைக் கைது செய்வதற்காக வாகனத்தில் பொலிஸார் சென்றுள்ளனர்.

இதன்பாதே அந்த வாகனத்தின் மீது வீதியில் நின்ற நபர் ஒருவரால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதையடுத்து அந்த நபரைப் புளியங்குளம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அவரை மேலதிக விசாரணைகளின் பின்னர் வவுனியா மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்துவதற்குரிய நடவடிக்கையைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

## உயர்தர வினாத்தாள் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியானமையால் அதையிட்டு அனைவரும் அறிந்திருந்த போதிலும், அதுவரை பரீட்சைத் திணைக்களத்திற்கு அதுகுறித்து தெரியாமல் இருந்ததாகவும் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

மேலும், அம்பாறைப் பகுதியில் இது தொடர்பில் ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டதன் பின்னரே மேற்படி பரீட்சையின் முதலாவது பாக வினாத்தாளும் வெளியானமை தெரியவந்ததாகவும், அதனை அந்த ஆசிரியர் சமூக வலைத்தளங்களில் பகிரங்கப்படுத்தாமல் இருந்திருந்தால் இந்தச் சம்பவம் மூடி மறைக்கப்பட்டிருக்கும் எனவும் ஜோசப் ஸ்டாலின் சுட்டிக் காட்டியுள்ளார். (ரெப-07)

## சுதந்திர தின எதிர்ப்புப் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடக அறிக்கையில்,

“ஈழத்தமிழர்களின் போராட்ட வரலாற்றில், தியாகச் சாவைத் தழுவிக்கொண்ட முதல் மனிதன் என்னும் மரியாதைக்குரிய திருமலை நடராஜன் அவர்கள், 1957.02.04 ஆம் திகதியன்று நடைபெற்ற இலங்கையின் சுதந்திர தினத்துக்கு எதிர்ப்பைத் தெரிவித்து, திருமலையில் ஏற்றப்பட்டிருந்த சிங்கக் கொடியை அகற்றி கறுப்புக்கொடியை ஏற்றியமைக்காக சிங்களப் பொலிசாரால் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டு 67 வருடங்கள் கடந்தும், இந்த நாட்டில் தமிழர்களின் இறைமை இன்றளவும் அங்கீகரிக்கப்படவில்லை.

தமது பூர்வீக மண்ணில் கட்டமைக்கப்பட்ட இனப் படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டுவரும் தமிழ்த்தேசிய இனத்தின் இருப்பை நிலைநிறுத்த, அரசுக்கும் அரச கட்டமைப்புகளுக்கும் எதிராக எல்லாவழிகளிலும் போராட வேண்டிய நிர்ப்பந்தத்திலுள்ள எமது மக்களது அக உணர்வுகளின் பிரதிபலிப்பாகவும், எமது மக்களின் குரலாகவுமே யாழ்.பல்கலைக்கழக மாணவர்களால் இந்த எதிர்ப்புப் போராட்டம் ஒழுங்கமைக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் அபிலாசைகள் நிறைவேற்றப்படாதவரை, ஈழத்தமிழர்களை இறைமையுள்ள தேசிய இனமாக இலங்கைத் தேசம் அங்கீகரிக்காதவரை, இந்த நாட்டின் சுதந்திர தினம் தமிழ் மக்களின் கரிநாளே என்பதை மீள வலியுறுத்தும் இந்தப் போராட்டத்தில், அரசியற் கட்சி மற்றும் கொள்கை வேறுபாடுகள் எவையுமற்று எமது இனத்தின் உரிமைக்கான ஏகோபித்த குரலாக எல்லோரும் இணைந்து, இதனை ஒரு மக்கள் திரட்சி மிக்க போராட்ட வடிமாக எழுச்சிபெறச் செய்ய வேண்டுமெனக் கேட்டு நிற்கிறேன்.” - என்றுள்ளது. (அ)

## வடக்கு, கிழக்கில் இரண்டு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டு ஈரநில பகுதிகளையும் தமது வசதிக்கேற்ப விடுவித்துக் கொள்வதற்கு இவர்கள் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தனது குற்றச்சாட்டில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

2017 ஆண்டு தொடக்கம் இந்த இரண்டு ஈரநிலம் பகுதிகளில் மீன் வளர்ப்பு பண்ணைகளை அமைக்க பல தடவைகள் முயற்சிக்கப்பட்ட போதிலும் சுற்றாடல் ஆர்வலர்களின் எதிர்ப்பினால் அத்திட்டம் முறியடிக்கப்பட்டதாகவும் கலாநிதி ஜகத் குணவர்தன சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆதாம் பாலம் கடல்சார் வனத்திற்குரிய பல தீவுகள் தற்போது வர்த்தக அல்லது அபிவிருத்தி நோக்கங்களுக்காக கையகப்படுத்த திட்டமிடுவதாக தகவல் கிடைத்திருப்பதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

குறித்த ஈரநிலப் பகுதிகள் தொடர்பாக 2012 ஆம் ஆண்டு ‘லங்கா பறவைகள் சங்கம்’ நடத்திய ஆய்வில், இடம்பெயரும் பறவைகளில் - அதிக எண்ணிக்கையிலான பறவைகள் ஒரே இடத்தில் ஒன்று சேர்கின்ற உலகின் இரண்டாவது இடமாக இந்த ஈரநில பகுதிகள் அமைந்துள்ளதாகவும் அவர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார். (ரெப-05)

## பெலியத்த படுகொலை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள பெண்ணின் கணவன் ஓய்வுபெற்ற கடற்படை அதிகாரியாவார். துப்பாக்கிச் சூடு நடத்தியவர்களில் அவரும் உள்ளார் என தெரிய வருகின்றது.

அத்துடன், துப்பாக்கிச்சூட்டை நடத்திய இருவர் வெளிநாட்டுக்கு தப்பிச் சென்றுள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது. இருவரும் முன்னாள் பாதுகாப்பு படைச் சிப்பாய்கள் என தெரியவந்துள்ளது.

ஒருவர் விமானம் மூலமும், மற்றையவர் கப்பல் மூலமும் வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்றுள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

பெலியத்தயில் ஐவர் படுகொலை செய்யப்பட்டுள்ள சம்பவம் தொடர்பில் இதுவரை மொத்தம் 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com



# ஜம்பு நிலக்கடலை பயிர்ச்செய்கையை ஊக்குவிக்க விவசாய உபகரணங்கள்!

(வி.ரி.சகாதேவராஜா)

விவசாய நவீன மயமாக்கல் திட்டத்தின் கீழ் ஜம்பு நிலக்கடலை பயிர்ச்செய்கை நடவடிக்கையினை ஊக்குவிக்கும் பொருட்டு ஐரோப்பிய யூனியன் நிதிப்பங்களிப்புடன் செயற்படுத்தப்பட்டு வரும் வேலைத்திட்டத்தின் கீழ் திருக்கோவிலில் தெரிவு செய்யப்பட்ட 88 பயனாளிகளுக்கு விவசாய உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

திருக்கோவில் பிரதேச செயலகத்தில பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மாவட்டச் செயலாளர் சிந்தக அபேவிக்ரம கலந்து கொண்டு தெரிவு செய்யப்பட்டுள்ள பயனாளிகளுக்கு வழங்கிவைத்தார்.

இந்நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் திருமதி.எஸ். நிருபா, கிழக்கு மாகாண விவசாய திணைக்களத்தின் பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.ஞானச்செல்வம், கிழக்கு மாகாண விவசாய திணைக்களத்தின் விவசாய விஞ்ஞானி ஏ.அருணந்தி, நிர்வாக உத்தியோகத்தர் ரி.மோகனராஜா, கிராம சேவைக்கு பொறுப்பான நிருவாக உத்தியோகத்தர் என்.கந்தசாமி, திட்டத்திற்கான கள உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், பயனாளர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பசும்பால் விற்பனை நிலையம்



(நூருல் ஹுதா உமர்)

கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஊழியர்களின் நலன் கருதி ‘ஆரோக்கியா பாலகம்’ எனும் பெயரிலான பசும்பால் மற்றும் பால்சார் உற்பத்திகளின் விற்பனை நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக பதிவாளர் அ.பகிரதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், உபவேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம் விற்பனை நிலையத்தை திறந்து வைத்தார்.

கிழக்குப் பல்கலைக்கழக தொழிநுட்ப பீட பீடாதிபதி பேராசிரியர் த.மதிவேந்தன், கூட்டுறவுச் அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் கே.வி.தங்கவேல், பல்கலைக்கழக நிதியாளர் எம்.எம்.பாரிஸ், மாணவர் விவகாரங்கள் திணைக்கள சிரேஷ்ட உதவிப் பதிவாளர் எம்.எப்.எம்.மர்சூக் மற்றும் பல அதிகாரிகளின் பங்குபற்றலுடன் நிகழ்வு நடைபெற்றது.

பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஊழியர்களிடத்தில் தூய பசும்பால் அத்துடன் பால் உற்பத்திகளின் பயன்பாட்டை மேம்படுத்தும் நோக்கில், மட்டக்களப்பு கொம்மாதுறை கால்நடை அபிவிருத்தி, பால் சேகரிப்பு, கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் இவ்விற்பனை நிலையத்தை முன்னெடுத்துச் செல்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# டாக்டர் பதியுதீன் மஹ்மூத் வித்தியாலயம் 10 ஆண்டு நிறைவு நிகழ்வும் பரிசளிப்பும்



(எம்.ஏ.ஏ.அக்தார்)

மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்திற்குட்பட்ட ஏறாவூர் டாக்டர் பதியுதீன் மஹ்மூத் வித்தியாலயம் 2014 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 10 ஆண்டு நிறைவு நிகழ்வும் பரிசளிப்பும் இடம்பெற்றன.

பாடசாலை பிரதான மண்டபத்தில் அதிபர் எம்.எம். ஜலால்தீன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் 2023 ஆம் ஆண்டு மெய்வல்லுனர் போட்டியில் வெற்றிகளை பெற்ற மாணவர்களும், 2023 ஆம் ஆண்டு 5 ஆம் தர புலமைப்பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களும், மற்றும் பிரதேச கலாசார போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களும் இங்கு கௌரவிக்கப்பட்டனர்.

மாணவர்களது கலை நிகழ்வுகளுடன் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பாடசாலையின் ஸ்தாபகரும் முன்னாள் அமைச்சருமான பசீர் சேகுதாவூத் கலந்து சிறப்பித்ததுடன் கௌரவ அதிதியாக மட்டக்களப்பு மத்தி வலயக்கல்விப் பணிமனையின் வலயக் கல்வி பணிப்பாளர் எம்.எஸ்.அமீர் உட்பட பிரதேச முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# சைவத் தமிழ் மன்றத்தின் புலவது பட்டமளிப்பு விழா




(வி.ரி.சகாதேவராஜா)

சைவத் தமிழ் மன்றத்தின் அகில இலங்கை சைவ பண்டிதர் சபையானது 2023 ஆண்டில் நடாத்திய சைவ பண்டிதர், இளஞ்சைவ பண்டிதர் தேர்வுகளில் சித்தி பெற்றவர்களுக்கான பட்டமளிப்பு விழா நாளை சனிக்கிழமை மட்டக்களப்பு தமிழ்ச்சங்க மண்டபத்தில் பிற்பகல் 2 மணி தொடக்கம் நடைபெற உள்ளது.

சைவத்தமிழ் மன்றத்தின் தலைவர் கிழக்குப் பல்கலைக்கழக மருத்துவத்துறை பீடாதிபதி சைவப் புலவர் சைவப் பண்டிதர் பேராசிரியர் தி.சதானந்தன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் முன்னிலை அதிதிகளாக கிழக்குப் பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் மா.செல்வராஜா மற்றும் கிழக்குப் பல்கலைக் கழக கலை கலாசார பீட பீடாதிபதி கலாநிதி வ.குணபாலசிங்கம் ஆகியோரும் சிறப்பு அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட கலாசார உத்தியோகத்தர் கி. குணநாயகமும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இம்முறை ஒரு சைவப் பண்டிதரும், பதினெட்டு இளஞ்சைவ பண்டிதர்களும் பட்டம் பெறத் தகுதி பெற்றுள்ளனர் என்று சைவத் தமிழ் மன்ற பொது செயலாளர் சைவபண்டிதர் சைவப்புலவர் செ.சாந்தரூபன் தெரிவித்துள்ளார்.

2017 இல் மண்டூரைச் சேர்ந்த சைவப்புலவர் கல்விப் பணிப்பாளர் தில்லைநாதனால் அகில இலங்கை சைவத் தமிழ் பண்டிதர் சபை ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்தச் சபையானது, ஒவ்வொரு வருடமும் பரீட்சைகள் நடத்தி பண்டிதர்களுக்கு சைவப் புலவர், இளம் சைவப் புலவர்கள் பட்டங்களை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.



# உக்ரைனுக்கு 5,000 கோடி யூரோ நிதியுதவி அளிக்கும் திட்டம் ஐரோப்பிய யூனியனின் சகல நாடுகளும் ஒப்புதல் வழங்கின

போரால் பாதிக்கப்பட்டுள்ள உக்ரைனுக்கு 5,000 கோடி யூரோ நிதியுதவி அளிப்பதற்கான திட்டத்துக்கு ஐரோப்பிய யூனியன் நேற்று ஒப்புதல் வழங்கியது.

தனது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்தத் திட்டத்தை ரத்து செய்யப்போவதாக யூனியன் உறுப்பு நாடான ஹங்கேரி பல வாரங்களாக மிரட்டி வந்த நிலையிலும், பிரஸ்ஸெல்ஸில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் இதற்கான ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உறுப்பினர்களின் ஆதரவு இருந்தால்தான் இந்த நிதியுதவித் திட்டத்தை அமலுக்குக் கொண்டு வர முடியும் என்ற நிலையில், திட்டத்துக்கு ஒப்புதல் அளிப்பதற்குப் பிரதியுபகாரமாக ஹங்கேரிக்கு விசேட சலுகை ஏதும் அளிக்கப்பட்டதா என்ற விவரம் வெளியிடப்படவில்லை.

இது குறித்து எக்ஸ் ஊடகத்தில் ஐரோப்பிய யூனியன் அமைப்பின் பொருளாதார விவகாரங்களை கவனித்துக் கொள்ளும் ஐரோப்பிய கவுன்சிலின் தலைவர் சார்ல்ஸ் மைக்கேல் வெளியிட்டுள்ள பதிவில், உக்ரைனுக்கு நிதியுதவி அளிக்கும் விவகாரத்தில் ஐரோப்பிய யூனியன் உறுப்பு நாடுகளிடையே ஒருமித்த ஒப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. உக்ரைனுக்கு நிலையான, நீண்ட காலம் நீடித்திருக்கக் கூடிய நிதியுதவி வழங்குவதற்கு அனைத்து உறுப்பு நாடுகளும் ஒப்புக்கொண்டுவிட்டன.

ரஷ்யாவுடனான போரில் உக்ரைனுக்கு உதவியளிப்பதற்கான பொறுப்பை நிறைவேற்றுவதில் ஐரோப்பிய யூனியன் முன்னிலை அடைந்துள்ளது, என்று தெரிவித்துள்ளார்.



நேட்டோவில் உக்ரைன் இணைவதற்கு எதிர்ப்பு தெரிவித்து, அந்த நாட்டின் மீது ரஷ்யா கடந்த 2022 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் படையெடுத்தது. இந்தப் போரில் உக்ரைனுக்கு ஆதரவாக அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகளும் ஆயுதங்கள் உள்ளிட்ட உதவிகளை அளித்தன. எனினும், அமெரிக்க எம்.பி.க்களில் ஒரு பிரிவினரின் எதிர்ப்பு காரணமாக அந்த நாடு உக்ரைனுக்கு மேற்கொண்டு உதவிகள் அளிப்பதில் பின்னடைவு ஏற்பட்டு வருகிறது. இது, உக்ரைன் போரில் ரஷ்யாவுக்கு சாதகமான சூழலை ஏற்படுத்தும் என்று அஞ்சப்பட்டது.

இந்தச் சூழலில், போர் காரணமாக பெரும் பொருளாதார நெருக்கடியை சந்தித்துள்ள உக்ரைனுக்கு நிதியுதவி வழங்கும் ஐரோப்பிய யூனியன் அமைப்பின் திட்டத்திலும் உள் அரசியல் காரணமாக இழுபறி நீடித்து வந் தது. பொருளாதாரச் சரிவிலிருந்து உக்ரைனைப் பாது காக்கும் வகையில் அந்த நாட்டுக்கு இந்த ஆண்டிலிருந்து வரும் 2027 ஆம் ஆண்டு வரை 5,000 கோடி யூரோ நிதியுதவி அளிக்க ஐரோப்பிய யூனியன் கடந்த டிசம்பர் 26 ஆம் திகதி முடிவெடுத்தது.

மேலும், ஐரோப்பிய யூனியனில் உக்ரைனைச் சேர்த்துக்கொள்ளவும் உறுப்பு நாடுகள் முடிவு செய்தன. இதற்கு உடனடி ஒப்புதல் வழங்கிய ஹங்கேரி, உக் ரைனுக்கு 5,000 கோடி யூரோ நிதியுதவி வழங்கும் திட்டத்தை மட்டும் எதிர்த்தது. யூனியனின் 27 உறுப்பு நாடுகளும் ஒருமனதாக சம்மதித்தால்தான் அந்தத் திட்டத்தை அமலுக்குக் கொண்டு வர முடியும் என்ற நிலையில், இது தொடர்பாக நடைபெற்று வந்த கூட்டங்களைப் புறக்கணித்ததன் மூலம் இதற்கான ஒப்பந்த உருவாக்கத்தை ஹங்கேரி தடுத்து வந்தது.

ரஷ்யாவின் மிக நெருங்கிய கூட்டாளியான ஹங்கேரியின் பிரதமர் விக்டர் ஆர்பன், ஐரோப்பிய யூனியனால் முடக்கிவைக்கப்பட்டுள்ள தங்கள் நாட்டுக்கான நிதியை விடுவித்தால்தான் உக்ரைனுக்கான 5,000 கோடி யூரோ நிதியுதவித் திட்டத்துக்கு ஒப்புதல் வழங்குவோம் என்று பிடிவாதமாகக் கூறி வந்தார். போரில் ரஷ்யா வெற்றி பெற்றால் ஐரோப்பிய பிராந்தியத்துக்கே அது அச்சுறுத்தல் என்று கருதப்படும் நிலையிலும் இந்த நிலைப்பாட்டில் அவர் உறுதியாக இருந்தார்.

இந்த நிலையில், உக்ரைனுக்கு 5,000 கோடி யூரோ நிதியுதவி வழங்கும் திட்டத்துக்கு ஹங்கேரி உள்ளிட்ட ஐரோப்பிய யூனியனின் அனைத்து உறுப்பு நாடுகளும் வியாழக்கிழமை ஒப்புதல் வழங்கியமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (04)

## காஸா தாக்குதலில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 27,000த்தைக் கடந்தது



காஸாவில் அண்மைக் காலமாக இஸ்ரேல் நடத்திவரும் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை நேற்று 27,000 த்தைக் கடந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து அந்தப் பகுதி சுகாதாரத் துறை அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், காஸாவில் இஸ்ரேல் ராணுவம் கடந்த ஒக்டோபர் 7 முதல் நடத்தி வரும் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 27,000த்தைக் கடந்துள்ளது.

வியாழக்கிழமை நிலைவரப்படி இஸ்ரேல் குண்டுவீச்சில் இதுவரை 27, 019 பேர் உயிரிழந்துள்ளனர். 66,139 பேர் காயமடைந்துள்ளனர் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காஸாவிலிருந்து இஸ்ரேலுக்குள் கடந்த ஆண்டு ஒக்டோபர் 7ஆம் தேதி நுழைந்த ஈரான் ஆதரவு பெற்ற ஹமாஸ் அமைப்பினர், அங்கு சுமார் 1,200 பேரை படுகொலை செய்தனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டது. அதையடுத்து, காஸாவில் இஸ்ரேல் கடுமையான தாக்குதல் நடத்தி வருகிறது. (04)

## அதிநவீன ட்ரோன்கள் இந்தியாவுக்கு விற்பனை அமெரிக்க அரசு நேற்று ஒப்புதல் வழங்கியது!

இந்தியாவுக்கு 31 எம்க்யூ-9பி ஆயுதம் தாங்கிய ட்ரோன்களை விற்பனை செய்ய அமெரிக்க அரசு நேற்று ஒப்புதல் அளித்துள்ளது.

நீர்மூழ்கிக் கப்பல்களுக்கு எதிராக போர் புரிதல், கடல் பரப்பில் கண்காணிப்பு உள்பட பல்வேறு பணிகளை எம்க்யூ-9பி ஆயுதம் தாங்கிய ட்ரோன்கள் மேற்கொள்ளும்.

அதிக உயரத்தில் நீடித்து உழைக்கும் அந்த ட்ரோன்கள், வானில் 35 மணித்தியாலத்துக்கும் மேலாக பறக்கக் கூடியவை. அந்த ட்ரோன்களால் 4 ஹெல்பையர் வகை ஏவுகணைகள், சுமார் 450 கிலோ வெடிகுண்டுகளை சுமந்து செல்ல முடியும்.



இந்நிலையில், அமெரிக்காவிடம் இருந்து 31எம்க்யூ-9பி ஆயுதம் தாங்கிய ட்ரோன்களை வாங்குவதற்கு இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமையிலான பாதுகாப்புத் தளவாட கொள்முதல் சபை கடந்த ஆண்டு ஒப்புதல் அளித்தது.

31 ட்ரோன்களில் இந்திய கடற்படைக்கு 15 ட்ரோன்கள், ராணுவம் மற்றும் விமானப் படைக்கு தலா 8 ட்ரோன்கள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.




## இம்ரானின் மனைவி புஷ்ரா பீபி அவரது இல்லத்திலேயே சிறை



பரிசுப் பொருள் முறைகேடு வழக்கில் பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கானுடன் 14 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட அவரது மனைவி புஷ்ரா பீபி, இம்ரானின் இல்லத்திலேயே சிறைவைக்கப்பட்டார்.

பிரதமராக இருந்தபோது சவூதி அரேபிய பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மானிடமிருந்து பரிசாகப் பெற்ற 157 கோடி மதிப்பிலான ஆபரணங்களை வெறும் 90 லட்சமாக மதிப்பிட்டு விலைக்கு வாங்கிய வழக்கில் இம்ரானுக்கும், புஷ்ராவுக்கும் ஊழல் தடுப்பு நீதிமன்றம் புதன்கிழமை 14 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்தது.

அதையடுத்து, வழக்கு நடைபெற்று வந்த அடியாலா சிறை வளாகத்திற்கு புஷ்ரா பீவி ஆஜரானார். இந்த சிறையில்தான் வேறொரு வழக்கு தொடர்பாக இம்ரான் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், இஸ்லாமாபாதிலுள்ள இம்ரான் கான் இல்லத்தின் ஒரு பகுதி சிறைச்சாலையாக மாற்றப்பட்டு, அதில் புஷ்ரா நேற்று சிறைவைக்கப்பட்டதாகப் பாகிஸ்தான் செய்திகள் தெரிவிக்கின்றன. (04)

மாலைக்கதிர்
Maalaikkathir
செய்திகள்
வெள்ளிக்கிழமை
04.02.2024


# அட்டாளைச்சேனை பெரிய பள்ளிவாசல் தலைவராக சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ.எல்.எம். ஹனீஸ் தெரிவு

(கே.எ.ஹமீட்)

அட்டாளைச்சேனை பெரிய பள்ளிவாசல் தலைவராக தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ.எல்.எம். ஹனீஸ் நேற்று தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

12 குடிகளின் பிரதிநிதிகளிலிருந்து தலைவர் பதவிக்காக இவர் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அறி விக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னரும் அட்டாளைச்சேனை பெரிய பள்ளிவாசலின் தலைவராக 2014ஆம் ஆண்டு தொடக்கம் 2018ஆம் ஆண்டு வரை, ஹனீஸ் பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவரின் தந்தை மரஹூம் அஹமட் லெப்பையும் அட்டாளைச்சேனை பெரிய பள்ளிவாசலின் தலைவராக 23 வருடங்கள் பணியாற்றியுள்ளார்.

இதேவேளை, பெரிய பள்ளிவாசலின் புதிய கட்டட நிர்மாணத்துக்காக 100 பேரிடம் தலா ஒரு லட்சம் ரூபா நிதியை அறவிடும் திட்டத்தை இதன்போது ஆரம்பித்து வைத்த புதிய தலைவர் ஹனீஸ், அதற்கு தனது பங்களிப்பாக ஒரு லட்சம் ரூபாவை முதன்முதலில் வழங்கி வைத்தார்.



# 15 ஆவது ஆண்டினை பூர்த்தி செய்த சம்மாந்துறை ஐ.பீ.எம். கழகம்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

சம்மாந்துறை மண்ணில் விளையாட்டுக் கழகமாகவும், சமூக சேவை அமைப்பாகவும் செயற்பட்டு வந்த ஐ.பீ.எம். கழகமானது இவ்வாண்டு 15 ஆவது ஆண்டினை வெற்றிகரமாக பூர்த்தி செய்துள்ளது.

இதனைக் கொண்டாடும் வகையில் சம்மாந்துறை அல் அமீர் பாடசாலையில் புதிய சீருடை அறிமுக விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உரை பெயர்ப்பாளர் முஹம்மட் நஜிமுதீன் பிரதம அதிதியாகவும் சமூக ஆர்வலர் அனீஸ் விசேட அதிதியாகவும் கலந்து கொண்டு கழகத்தின் புதிய சீருடையினை அறிமுகம் செய்தனர்.

இந்நிகழ்வில் கழக நிர்வாக உறுப்பினர்கள், கழக உறுப்பினர்கள், நலன் விரும்பிகள் என பலர் கலந்து கொண்டனர்.




# மட்டக்களப்பு லியோ கழக உறுப்பினர்கள் தாண்டியடி மாணவர்களுக்கு உதவிகள்


(எம்.ஏ.ஏ.அக்தார்)

தாண்டியடி மகா வித்தியாலயத்திற்கு விஜயம் செய்த மட்டக்களப்பு லியோ கழக அங்கத்தவர்கள் பாடசாலை மாணவர்கள் கற்றலில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாக மாணவர்களுடன் கலந்துரையாடியிருந்தனர்.

மாணவர்களின் தலைமைத்துவ பண்புகளை வளர்க்கும் நோக்கில் ஆலோசனையும் வழிகாட்டலும் வழங்கும் நிகழ்வையும் அவர்கள் ஒழுங்கு செய்திருந்தனர்.

மாணவர்களின் கற்றலை மேம்படுத்தும் வகையில் கற்றல் உபகரணங்களையும், ஆடைகளையும் இதன்போது அவர்கள் வழங்கி வைத்தனர்.

# கல்விச்சாதனையாளர் கௌரவிப்பு விழா




(வி.ரி. சகாதேவராஜா)

காரைதீவு ரக்ஸ் மற்றும் அஸ்கோ அமைப்பின் வருடாந்த கல்விச்சாதனையாளர் கௌரவிப்பு விழா நாளை (3) சனிக்கிழமை காரைதீவில் நடைபெறவிருக்கிறது.

காரைதீவு விபுலானந்தா கலாச்சார மண்டபத்தில் நாளை காலை 9. 30 மணியளவில் அமைப்பின் தலைவர் ஓய்வுநிலை பொறியியாளர் அ.விவேகானந்தராஜா தலைமையில் இந்த நிகழ்வு ஆரம்பமாகவுள்ளது. இந்த நிகழ்வில் கிழக்கு பல்கலைக்கழக தொழிநுட்பீட பீடாதிபதி பேராசிரியர்கலாநிதி தவநாயகம் மதிவேந்தன் பிரதம அதிதியாகவும், கிழக்கு மாகாண மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர் எஸ். புவனேந்திரன் உள்ளிட்ட பல அதிதிகளும் கலந்து சிறப்பிக்கின்றார்கள்.

இங்கு மூன்று ஏ பெற்ற மாணவர்களுக்கு தலா ஒரு லட்ச ரூபா பரிசும் ஏனைய மாணவர்களுக்கும் பரிசுகளும் வழமைபோல் வழங்கி கௌரவிக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# மின்சாரசபையின் அதிகாரி சபைக்குரிய பணத்தில் ஆடம்பர பொருட்களை வாங்கி மாட்டிக் கொண்டார்

## கையாடியது ரூ.95,000 - விசாரணைக்கு செலவு ரூ.3 லட்சம்

இலங்கை மின்சார சபையின் மேலதிக பொது முகாமையாளராக (திட்டங்கள்) பணியாற்றிய அதிகாரி ஒருவர் பிரான்ஸ் நாட்டுக்கு சுற்றுலா சென்றிருந்தபோது மின்சார சபைக்குரிய பணத்தில் ஆடம்பர கைப்பைகள் (ஹான்ட் பாக்) மற்றும் காலணிகள் வாங்கப்பட்ட சம்பவம் குறித்து விசாரணை நடத்த மூன்று லட்சத்து எழுபத்தைந்தாயிரம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலதிக பொது முகாமையாளர் பதவியை வகித்த குறித்த பொறியியலாளர், மின்சார சபைக்கு சொந்தமான தொண்ணூற்று ஐந்தாயிரத்து எழுநூற்று எழுபத்தைந்து (95,775) ரூபாவை செலவழித்து இவ்வாறு தனது தனிப்பட்ட தேவைகளுக்காக காலணிகள் மற்றும் கைப்பைகளை வாங்கியுள்ளார்.

மின்சார சபையின் பணத்தை செலவழித்து இந்த பொருட்களை இவர் கொள்வனவு செய்ததாக தகவல் வெளியானதையடுத்து, அவர் மீது ஒழுக்காற்று விசாரணை நடத்த நிர்வாகம் நடவடிக்கை எடுத்திருந்தது. அவர் மோசடி செய்த பணத்தொகையை விட அவருக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட ஒழுக்காற்று விசாரணைகளுக்கென மூன்று மடங்கு பணம் செலவு செய்யப்பட்டுள்ளமை குறித்து மின்சார சபை பொறியாளர்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

பெரும் பொருட்செலவில் நடத்தப்பட்ட ஒழுக்காற்று விசாரணையின் முடிவில் சம்பந்தப்பட்ட மேலதிக பொது முகாமையாளரை பதவியிலிருந்து நீக்குமாறும், பாதணிகள் மற்றும் கைப்பைகள் வாங்குவதற்கு செலவு செய்த மின்சார சபைக்கு சொந்தமான பணத்தை அவரிடமிருந்து அறவிட வேண்டும் எனவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. (ரெப-01)

# கிழக்கு மாகாண பாலர் பாடசாலைகளுக்கு சிறுவர்களை அனுமதிப்பதில் பாரிய வீழ்ச்சி

கிழக்கு மாகாணத்தில் பாலர் பாடசாலைகளுக்கு சிறுவர்களை அனுமதிப்பதில் ஏனைய வருடங்களுடன் ஒப்பிடுகையில், இந்த வருடம் (2024) பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண பாலர் பாடசாலைகள் பணியகத்தின் ஒருங்கிணைப்பு அதிகாரி அசேல சதுரங்க தெரிவித்துள்ளார்.

இதன்படி 50 வீத பிள்ளைகள் பற்றாக்குறை நிலவுவதாகவும், முன்னர் 20 பிள்ளைகள் இருந்த பாலர் பாடசாலைகளில் தற்போது 5 முதல் 6 பிள்ளைகளே இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் பாலர் பாடசாலைச் சங்கத்தின் தலைவர் நில்மினி சேனாநாயக்க கூறுகையில், கடந்த காலங்களில் ஒவ்வொரு குடும்பத்திலும் குழந்தைகள் பிறப்பு வீதம் குறைந்திருந்தமையே இதற்கு முக்கிய கார ணம் எனவும், அத்துடன் இரண்டு வருடங்களுக்கு பாலர் பாடசாலைக்கு அனுப்ப வேண்டிய தமது பிள்ளைகளை பொருளாதார நெருக்கடி காரணமாக ஒரு வருடத்திற்கே பெற்றோர் அனுப்பும் நிலை தோன்றியிருப்பதும் மற்றுமொரு காரணம் எனவும் தெரிவித்துள்ளார்.

இந்த நிலை எதிர்காலத்தில் மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் காரணத்தை அடிப்படையாகக் கொண்டு, பாலர் பாடசாலை ஆசிரியர்கள் பலர் எதிர்காலத்தில் தமது தொழில் வாய்ப்பை இழக்கும் நிலையும் தொலைவில் இல்லை என பாலர் பாடசாலைகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ரெப-03)

# வணிக ஸ்தாபனத்தில் வற் பதிவுச் சான்றிதழை தெளிவாகக் காட்சிப்படுத்தப்படுவது கட்டாயம்!

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால், வணிக நிறுவனங்களுக்கு வழங்கப்படும் வற் பதிவுச் சான்றிதழை, வணிக ஸ்தாபனத்தில் தெளிவாகக் காட்சிப்படுத்தப்படுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தின் கிளைகளுக்கு, பிரதேச சபையினால் வழங்கப்படும் சான்றிதழின் நகலை காட்சிப்படுத்த வேண்டியது அவசியமாகும் என நுகர்வோர் விவகார அதிகாரசபை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பதிவு செய்யப்பட்டுள்ள ஒவ்வொரு உற்பத்தியாளர், இறக்குமதியாளர், கேள்வி மனுக்களின் ஊடாக ஒப்பந்தங்களின் கீழ் பதிவுசெய்யப்பட்ட சேவை வழங்குநர் மற்றும் பொருட்களை விநியோகிப்போர் தங்கள் பதிவு எண்ணை விற்பனை சீட்டில் தெளிவாக குறிப்பிட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் விளக்கமளித்த நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் சாந்த கிரிஎல்ல, வற் வரி அதிகரிக்கப்பட்ட பொருட்களுக்கு சில வர்த்தக நிறுவனங்கள் மீண்டும் வற் வரியினை அறவிடுவதாக தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவித்தார்.

அவ்வாறு அறவிடப்படுவதானது நுகர்வோர் விவகார அதிகார சபை சட்டத்தின் 30 மற்றும் 31 ஆம் சரத்துகளுக்கு அமைய, தண்டனைக்குரிய குற்றமாகும் என அவர் குறிப்பிட்டார்.

எனவே, வற்வரி அதிகரிப்புக்கு முன்னர் இருந்த விலையினையும், அந்த வரி அதிகரிக்கப்பட்டதன் பின்னர் உள்ள விலையினையும் பொருட்களில் காட்சிப்படுத்துவது அவசியமாகும் என நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் சாந்த கிரிஎல்ல தெரிவித்தார். (ரெப-04)







## அம்பாறையில் பெரும்போக நெல் அறுவடை ஆரம்பம்!



(அஸ்ஹர் இப்றாஹிம்)

இலங்கையின் நெல் உற்பத்தியில் பெரும் பங்கினை வகிக்கும் அம்பாறை மாவட்டத்தின் சகல இடங்களிலும் பரவலாக நெல் அறுவடை ஆரம்பமாகியுள்ளது.

ஒரே நேரத்தில் பொத்துவில், அக்கரைப்பற்று, நிந்தவூர், காரைதீவு, சாய்ந்தமருது, சம்மாந்துறை அம்பாறை மற்றும் கல்முனை விவசாய விரிவாக்கல் பிரிவிற்குட்பட்ட இடங்களில் பெரும்போகத்தில் செய்கை பண்ணப்பட்ட வேளாண்மை அறுவடை ஆரம்பித்துள்ளதால் அறுவடை இயந்திரங்களுக்கு பாரிய தட்டுப்பாடு நிலவுகின்றது.

அண்மையில் பெய்த அடை மழை மற்றும் சேனநாயக்க சமுத்திரத்தின் வான் கதவு திறக்கப்பட்டதால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு காரணமாக நெல் வயல்கள் வெள்ளத்தில் மூழ்கியதால் விளைச்சலில் பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும், ஈடு செய்ய முடியாத நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அனேகமான வயல்கள் முற்றாக சேதமடைந்துள்ளதால் அறுவடை செய்ய முடியாத நிலையில் கைவிடப்பட்டுள்ளன.

ஒரு ஏக்கருக்கு 40 தொடக்கம் 50 மூடைகள் வரை அறுவடை செய்யப்பட்ட வயல் நிலங்களில் 10 மூடைகள் நெல் கிடைத்தாலே போதும் என்ற நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

அறுவடை செய்யப்படும் நெல்லை உள்ளூர் மற்றும் வெளியூர் அரிசி ஆலை உரிமையாளர்கள் வயல் நிலங்களுக்கே வந்து நெல்லை கொள்வனவு செய்ய ஆரம்பித்துள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தில் வெயில் குறைவாக காணப்படுவதால் நெல்லை உலர்த்தி விதை நெல்லுக்காக சேமித்து வைப்பதிலும் விவசாயிகள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதற்கிடையில் மாவட்ட விவசாயத் திணைக்களம், விவசாய விஸ்தரிப்பு நிலையங்களினூடாக நஷ்ட ஈடு வழங்குவதற்கான தகவல்களை திரட்டி வருவதாக அம்பாறை மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் டீ.எம்.எஸ்.பி. திஸாநாயக தெரிவித்துள்ளார்.

## காரைதீவுக் கடற்கரையில் இன்று சிரமதானம்



(வி.ரி. சகாதேவராஜா)

இலங்கை குடியரசின் 76 வது சுதந்திர தினத்தை முன்னிட்டு காரைதீவு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் இன்று வெள்ளிக்கிழமை கடற்கரைப் பகுதியை சுத்தம் செய்தனர்.

காரைதீவு பிரதேச செயலாளர் சிவ.ஜெகராஜன் தலைமையிலான பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் “பிளாஸ்டிக் அற்ற வெள்ளிக்கிழமை” என்கின்ற தொனிப் பொருளில் இன்று காலை 7 மணி முதல் மதியம் 12 மணி வரை கடலோரச் சுத்தத்தை மேற்கொண்டனர்.

சிரமதானத்தில் பிரதேச சபையினரும் பொலிசாரும் பங்கு பற்றியிருந்தனர்.

JRIDE
BEYOND THE ROAD

Safety and comfort are our concern

# ஜேரைட் JRIDE

## TAXI APP FROM JAFFNA

இலங்கை முழுவதும் | Islandwide

DOWNLOAD PASSENGER APP:

ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.

**நாங்கள் தயாராகிவிட்டோம்!**

யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)

jride

JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install

JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install

இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!

YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE

GET IT ON Google Play
Download on the App Store

**வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!**

உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க ஒரு தீர்வு!

இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் சேவையை தொடங்கலாம்!

GET IT ON Google Play
Download on the App Store

DOWNLOAD DRIVER APP:

jride

JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install

JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install

YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE

## SCHEDULED BOOKING

New Feature
புதிய வசதி

நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?

விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?

எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.

**Hotline : 706563213 / 703563213**

**JRIDE TAXI APP**
**SPEED IT NET**
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

+94 703 563213
www.jride.lk

மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.02.2024 இல் வெளியிடப்பெற்றது.